DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC. No. | 756/2023 |
| Prosecution: | அ.சா.2 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | சதீஷ் |
| **Father Name** | ~ | பூபதி |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 18.06.2025.**

**முதல் விசாரணை**

நான் பழைய பல்லாவரத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். 28.4.2022 அன்று இரவு 8.15 மணிக்கு பி.வி. வைத்திலிங்கம் சாலையில் உள்ள சரஸ்வதி திருமண மண்டபம் அருகே நானும் எனது நண்பர் ப.சா.2 லோகேஷ் என்பவரும் டீ குடித்துக் கொண்டு இருந்தோம். அ.சா.1 அப்போது அந்த இடத்தின் அருகே அலரம் சத்தம் எழுப்பினார். அங்கு சென்று பார்த்தபோது இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் சென்றதை பார்த்து கத்தினார்கள். அப்போது அ.சா.1 இடம் கேட்டபோது தனது செயினை பறித்து சென்றதாக சொன்னார். அதன் பின்னிட்டு போலிசாருக்கு தகவல் கொடுத்த அங்கு வந்தார்களள. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் மேற்படி மண்டபத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரணையிலும் அ.சா.1 இடம் நகையை பறித்து சென்ற நபர்களை பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் என்னிடம் கையொப்பம் எதுவும் பெறவில்லை. போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்யவில்லை. சம்பவம் நடைபெற்ற இடத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். அ.சா.1 இடம் என்ன நகை பறித்து சென்றார்கள். மற்றும் எந்த இருசக்கர வாகனத்தில் வந்து பறித்து சென்றார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.